பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்பி

மலர்: 15] சென்னை: ஆடி 23உ (8—8—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 24உ (9—8—67) புதன் [இதழ்: 47

மது வெறியால் வார்னிஷைக் குடித்தவர்கள் பலி!

13 பேர் மாண்டனர்--ஆபத்தான நிலையில் 20 பேர்!

சென்னை, ஆக 7—

சென்னை நகரில் கிருஷ்ணம் பேட்டைப் பகுதியில் கடந்த ஞாயிறன்று ஆடி அமாவாசையை முன்னிட்டு, வார்னிஷ் குடித்த 50 பேர்களில் 13 பேர் மாண்டனர்.

இன்னும் இருபதுபேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

வார்னிஷ் குடித்த 5 பேர் இறந்த நிலையிலும், மற்றவர்கள் ஆபத்தான நிலையிலும் மருத்துவ விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டவர்களில் 8 பேர் பின்னர் இறந்து விட்டனர்.

இவர்கள் குடித்த பொருளில் நஞ்சு கலந்திருக்கும் என்று கருதப்படுகிறது.

இறந்தவர்களில் இருவர் பெண்கள்.

கவலைக்கிடமான நிலையிலுள்ள 20 பேரை சுமார் 30 மருத்துவர்கள் கவனித்து வருகின்றனர்.

நஞ்சு இரத்தத்தில் கலந்துவிட்டது என்றும், நாடித் துடிப்பும் இதயத் துடிப்பும் நின்றபோகாமல் பாதுகாத்து கொள்வதுதான் தாங்கள் செய்யக்கூடியதாகும் என்றும் மருத்துவர்கள் கூறினர்.

இந்தியை இணைப்பு மொழியாக்கத் துடிப்பு

மத்திய அமைச்சரவையில் பெரும்பான்மையினர் கருத்தாம்

எல்லாக் கல்வி நிலையங்களிலும் பயிற்று மொழியாக்க வேண்டுமாம்

புதுடில்லி, ஆக. 8—

"மருத்துவக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள் ஆகியவைகள் உட்பட எல்லா அனைத்திந்தியக் கல்வி நிறுவனங்களிலும் உடனடியாக இந்தியைப் பயிற்று மொழியாக்குவதன் மூலமும், பாதுகாப்புத் துறையிலும், நிர்வாகத் துறையிலும் விரைவாக இந்தியைப் பயன்படுத்துவதன் மூலமும்தான் இந்தி மொழியை இணைப்பு மொழியாகக் கொண்டுவரமுடியும்" என்ற கருத்தை மத்திய அமைச்சரவையிலுள்ள பெரும்பான்மையான அமைச்சர்கள் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாடாளுமன்றத்தில் ஆட்சி மொழிச் சட்டத்திற்கான திருத்தம் பற்றி அமைச்சரவை விவாதித்த போது மேலே குறிப்பிட்ட பிரச்சினை பற்றிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அமைச்சர்கள் சார்ளா, அசோக மேத்தா ஆகியவர்களைத் தவிர, மற்ற எல்லா அமைச்சர்களும், 'பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டவரும் ஆங்கிலத்தை அகற்றிவிடில இந்தி மொழியை இணைப்பு மொழியாக நீலை நிறுத்த முடியாது' எனக் கருத்தறிவித்ததாகத் தெரிகிறது.

"தற்போது பயிற்று மொழியாக உள்ள ஆங்கிலத்திற்குப் பதிலாக, அனைத்திந்தியக் கல்வி நிறுவனங்களில் இந்தியைப் பயிற்று மொழியாகவும், மாநிலங்களிலுள்ள கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவைகளில் அந்த மாநில மொழிகளைப் பயிற்று மொழியாகவும் ஆக்குவதே முதற்கட்டமாகச் செய்யவேண்டும்" என்று அவர்கள் கருதிக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

"ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத பள்ளிகளிலேயே கட்டாயமாகச் சேரவேண்டும்" என்ற கருத்து அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

"ஆங்கிலோ—இந்தியர்கள் மட்டுந்தான் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்கள்" என்பதும் அக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

தென்னக மக்களும், மேற்கு வங்க மக்களும் இந்த யோசனையினால் பெரும்பாலானமுதலமைச்சர்கள் காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிப்பதை ஆதரிக்கவில்லையாஞல், நகல் மசோதா மாற்றியமைக்கப்படலாமாம். (பெரும்பாலும் அப்படிப்பட்ட குழப்நிலை தான் ஏற்பட்டுள்ளது.) அப்படி மாற்றியமைக்கப்பட நேர்ந்தால் மாலவ்ளவையிலும் இச்சுட்டத் தொடரில, இம்மசோதாவைக் கொண்டுவர இயலாது என்று கூறப்படுகிறது.

இந்தி வெறியர்களுக்கு வளைந்து கொடுக்கிறது டில்லி?

ஆட்சிமொழி மசோதாவைக் கருவிலேயே சிதைக்க சதி!

முதலமைச்சர்களின் கருத்தறியும் 'நாடகம்' இன்னும் முடியவில்லையாம்

புதுடில்லி, ஆக. 7—

நேருவின் உறுதிமொழிக்குச் சட்ட உரூவம் கொடுக்கும் ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா,மக்களவையின் நடப்புத் தொடர்க் கூட்டத்தில் கொண்டுவரப்படமாட்டாது என்பது முற்றிலும் உறுதியாகிவிட்டது.

ஆனல், மக்களவைக் கூட்டத் தொடர் ஆக. 12-ல் முடிந்து விட்டபோதிலும், மாநிலங்களவைக் கூட்டம் தொடர்ந்து மேலும் ஒரு வாரம் நடைபெறலிருப்பதால், அந்த அவையில் இந்த மசோதாவைக் கொண்டுவரும்வகையில் எல்லா மாநில முதலமைச்சர்களிடமிருந்தும் மசோதா பற்றிய கருத்துக்கள் விரைவில் வந்து சேர்ந்து விடக்கூடும் என்று உள்துறை அமைச்சகம் நம்புகிறதாம்.

இப்போது ஒன்பது முதலமைச்சர்களின் கருத்துக்கள் கிடைத்திருகின்றன. அவற்றில் சில இந்தியேசாத மாநிலங்கள் உட்பட்ப பெரும்பாலான மாநில முதலமைச்சர்களின் கருத்துக்கள், இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக்குவதற்கு ஆதரவாக உள்ளனவாம்; எனவே, ஆங்கிலத்தைத் கால வரையின்றி நீடிப்பதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனராம்!

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், காலவரையின்றி ஆங்கிலம் நீடிக்க வகை செய்திருப்பதால் இம்மசோதாவுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

மற்ற முதலமைச்சர்கள் இன்னும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவில்லை.

டில்லி அமைச்சர் கைவிரிப்பு

புதுடில்லி, ஆக. 7—

"பாம் பனுக்கும்—தனுஷ்கோடிக்குமிடையே இருப்புப் பாதை போடுவதை இரயில்வே துறை கைவிட்டுவிட்டது"

என்று அமைச்சர் பகத் தர்சன், நாடாளுமன்ற மேலவையில் கூறினர்.

இராமேசுவரத்துக்கும்—தனுஷ்கோடிக்குமிடையே ஒரு சாலை போடும் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் கூறினர்.

கொதித்தெழுக்கூடும் என்பதையும் அமைச்சரவை பரிசீலித்ததாம்.

தென்னக மாநிலங்களில், தமிழ்நாட்டைத் தவிர, மற்ற மூன்று மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகியவை இந்திக்கு ஏற்படலாம் எதிர்ப்பையும் காட்டவில்லை என்று பொதுவாக அமைச்சரவை கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

"தமிழக எதிர்ப்பும், அரசியல் இயக்கமாகத்தான் இருக்கிறது" என்று சில அமைச்சர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்களாம்.

இப்பிரச்சினைப்பற்றி எவ்வித முடிவையும் அமைச்சரவைக் கூட்டம் செய்யவில்லை என்னும், மத்திய அமைச்சர்கள் மேற்சொன்ன கருத்துக்களைப் பொதுவாகக் கொண்டிருப்பது இவ் விவாதத்தின் மூலம் தெளிவாகப்பட்டிருக்கிறது.

திருச்சியில் சென்னை!

இந்தக் கிழமை துவக்கமுதல் ஒரு நான்கு நாட்களுக்கு திருச்சி நகரம் பரபரப்பில் தினைத்துவரும்!

சிறிது நாட்களுக்கு முன்னர் கோசிஜின்னையும், ஜான்சனையும் வரவேற்கத் திடுமெனத் தயாராக வேண்டியிருந்தது அமெரிக்காவின் சின்னஞ்சிறு நகரமான கிளாஸ் பாரோ.

அதைப்போல் முன்னறிவிப்பு இல்லாத ஒரு நில இல்லையென்றும், திருச்சி நகரம் தமிழகத்தின் ஒன்பது அமைச்சர்களையும் ஒருசேர ஒரு சில நாட்களுக்குத் தொடர்ந்தாற்போல் வீருந்தினர்களாகப் பெரும் பேறு பெற்றிருக்கிறது! இது ஏனைய எந்த நகரமும் பெருத பெருமை!

போலீசு அதிகாரிகள்—மாவட்டக் கலெக்டர்கள்—உயர் அதிகாரிகள் ஆகியோரின் ஆண்டு மாநாட்டை, தமிழக அமைச்சர்களின் முன்னிலையில்—மாநில கவர்னர் துவக்கிவைத்திருக்கிறர்!

அவர் தமது உரையில் குறிப்பிட்டபடி, அதிகமாக மலேவாசஸ்தலங்களிலும்,தலைநகரிலும் மட்டுமே நடைபெறும் இக்கூட்டம், இந்த முறை, கழக ஆட்சியில் முதன்முறையாகத் திருச்சித் திருநகரில் நடைபெறுகிறது!

"நாடாளுமன்றக் கூட்டத்தை ஆண்டுதோறும் தெற்கே சிலகாலம் நடத்தக்கூடாதா?" என்று அடிக்கடி கோரிக்கை எழுவதும், பின்னர் அது எப்படியோ கவனிப்பாரற்று மறைந்துவிடுவதும் இந்த நேரத்தில் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை!

'மக்களைத் தேடி நிர்வாகம்' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மாநில அரசின் இயந்திரம் இப்போது திருச்சியில் இருந்துவருகிறது!

அமைச்சர்கள் ஒன்பது பேரும் ஒருசேர அங்கே தங்கியுள்ளனர்!

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் மீதுள்ள கவனம், தற்காலிகமாக நான்கு நாட்களுக்குத் திருச்சி மலைக்கோட்டைக்குச் சென்றுள்ளது!

சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை

காவல்துறையினர் மாநாட்டில் அண்ணா வலியுறுத்தல்

திருச்சி, ஆக. 7— அண்ணா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"துப்புரியும் துறையை விரிவுபடுத்தி நல்ல முறையில் இயங்கச்செய்ய வேண்டும்.

கள்ள வணிகம்—பதுக்கல்—கள்ளக்கடத்தல் — கொள்ளை ஆகிய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல் துறை அதிகாரிகள் பாரபட்சமில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்துடனே, சாதி அடிப்படையிலோ நடக்கக் கூடாது.

எந்தவிதப் பயமும் இல்லாமல் நியாயமான முறையில் காவல் துறை அதிகாரிகள் செயல்பட வேண்டும்."

நாளை

'நம் நாடு' இதழில் சும்மா இருப்பாரா சுப்பிரமணியம்!



'திருவாளர் சந்தேகம்' பகுதியில் தோன்றுகிறார்

முரசொலி

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்.டி.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 23 (8—8—67) செவ்வாய்

அழகேசனுர் ஒப்பம்

'பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்க வேண்டும்' என்ற இலட்சியத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாக விளம்பரம் செய்து கொண்டவந்த காங்கிரசுக் கட்சி, அந்த இலட்சியத்தைச் செயலாற்றுவதில் கருத்தைச் செலுத்தவில்லே. ஏதேதோ காரணங் களேக் கற்றிக்கொண்டு, தன்னுல ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறி வந்த மேற்படி இலட்சியத்தைச் செயல்படுத்தத் தவறியே வந்திருக் கிறது.

ஆனல், தான் கொண்டிருக்கின்ற—'பஸ் போக்குவரத்தை நாட்டுடமையாக்க வேண்டும்' என்ற அதே இலட்சியத்தை— சாலாற்றாத்தாது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் செயல்படுத்த முனேந்திருக்கிறது முன்னேற்றக் கழக ஆட்சி ; இத் துறையில், விறுவிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

பஸ் போக்குவரத்தை நாட்டுடமையாக்கும் பணியில், கழக ஆட்சி தீவிரமாக இறங்கியிருக்கின்ற அதேநேரத்தில், அப்பணிக்கு பஸ் முதலாளிகளின் ஒத்துழைப்பையும், மனப்பூர்வமான ஆதர வையும் தேடிப் பெறுவதிலும் கருத்தைச் செலுத்துகிறது.

சட்டத்தைக் காட்டி அச்சுறுத்தி பஸ் முதலாளிகளேப் பணிய வைப்பதைவிட, அவர்களே அணுகி—நிலேமையை விளக்கிக் கூறி— தன் கருத்தை, 'நியாயமானது' என அவர்களேயும் ஏற்றுக்கொள் ளச் செய்வதுடன், அவர்கள் ஒத்துழைப்பையும் பெற்றுப் படிப்படி யாக பஸ் போக்குவரத்தை நாட்டுமையாக்குவதே விரும்பத்தக் கது—சனுயாக ஆட்சிமுறை உணர்வுக்கு உகந்தது என்பது கழக ஆட்சியின் தீர்மானம்.

அத்தீர்மானத்துக்கு ஏற்ற வகையில், பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கும் தனது கொள்கையைச் செயல்படுத்துவதற்கு, சிறந்த முறையை கழக ஆட்சி வகுத்துக்கொண்டிருக்கிறது. இச் சிறந்த முறைதான், '75 மைலுக்கு மேற்பட்ட பஸ் தடங்களேயும், சென்னே நகரத்தைத் தொடுகின்ற பஸ் தடங்களேயும் அரசுடைமை யாக்கிக் கொள்ளுவது' என்ற கழக ஆட்சியின் ஏற்பாடாகும்.

கழக ஆட்சி மேற்கொண்டிருக்கின்ற இச்சிறந்த ஏற்பாட் டைத்தான், ஒழலூர் அழகேசனூர், 'பெரும் பஸ் முதலாளிகளுக்குச் சலுகை காட்டுகின்ற சமதர்மம் ; சிறிய பஸ் முதலாளிகளுக்குக் கேடுபயக்கின்ற திட்டம்' என்றெல்லாம் வம்பு அளக்கிருக்கின்ருர்.

பெரிய முதலாளிகளால் நடத்தப்படுகின்ற பஸ்கள் அனேத் தையும், ஒரே நேரத்தில் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்— அப்படி ஏற்றுக்கொள்ளுவதன் காரணமாக ஏற்படக்கூடிய வம்பு வழக்குகளில் அரசாங்கம் சிக்கிக்கொள்ள வேண்டும்—கழக அரசு திக்குமுக்காட வேண்டும்—என, ஒழலூர் அழகேசனூர், அவரைப் போன்றவர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்படி ஒரு சூழ்நிலே ஏற்படும்படிச்சத்தில், 'ஆளத் தெரியாதவர் களிடம் ஆட்சியை ஒப்படைத்தீர்கள்! ஆழந்தெரியாமல் காலே விட்டுவிட்டு அல்லற்படுகின்றனர்! அலைக் கால் வைத்துவிட்டு அவதிப்படுகின்றனர்! பாருங்கள் பாருங்கள்!' என மேடைகள் தோறும் கொக்கரித்துக் கொண்டிருக்கலாம் என அழகேசனும், அவரைப் போன்றும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

கழக அரசு, அதற்கு வாய்ப்பு அளிக்கவில்லே. செம்மையான முறை வகுத்துக்கொண்டு, பஸ் போக்குவரத்தைப் படிப்படியாக நாட்டுடமையாக்குவதில் முனேந்து விட்டிருக்கிறது.

முன்றேற்றக் கழகம், மூன்று பொதுத் தேர்தல்களில் தான் நேரடியாகப் போட்டியிட்டிருக்கிறது. இம்மூன்று தேர்தல்களி லும், தேர்தல் செலவுக்கெனத் தி. மு. கழகம், பொதுமக்களிட மிருந்து நிதி திரட்டியுள்ளது. இப்படித் திரட்டப்பட்டிருக் கின்ற நிதிக்கு, பெரிய பஸ் முதலாளிகளோ சிறிய பஸ் முதலாளி களோ, 'பஸ் முதலாளி' என்ற முறையில் ஒரு புதுக்காசும் கொடுத்தது கிடையாது ; இது உலகறிந்த உண்மை.

ஆனல், காங்கிரசுக் கட்சியின் நிலே இதுவல்ல. இதுவரை காங்கிரசுக் கட்சி திரட்டியிருக்கின்ற ஒவ்வொரு தேர்தல் நிதியிலும் சிறிய—பெரிய பஸ் முதலாளிகள் தந்த தொகையே கூடுதலான தாகும். நிதி கொடுக்கத் தயங்கிய பஸ் முதலாளிகளிடம் கசக்கிப் பிழிக்தும் காங்கிரசுக் கட்சி நிதி திரட்டி வந்திருக்கிறது.

இவ்வாறு சிறிய பஸ் சொந்தக்காரர்களா அல்லது பெரிய பஸ் சொந்தக்காரர்களா என்பது பற்றிய கவலே இல்லாமல், பஸ் முதலாளிகள் அனேவரிடமும் காங்கிரசுக் கட்சி, ஒவ்வொரு முறை யும் தேர்தல் நிதி திரட்டிவந்திருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பஸ் முதலாளி தனது தேர்தல் நிதிக்குக் கொடுக்கின்ற தொகையின் அளவுக்கேற்ப புதிய பஸ் தடங்களில் பஸ் விடும் அனுமதியை அந்த முதலாளிக்கு வழங்கியும் வந்திருக்கிறது காங்கிரசு ஆட்சி!

இந்த அளவுடனும் விவகாரம் முற்றுப்பெற்றுவிடவில்லே! 1962-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், காங்கிரசு வேட்பாளர்களைப் பல பஸ் முதலாளிகள் பங்கு கொண்டிருக்கின் றனர். அவர்களில் ஒருவர்-இருவர் நீங்கலாக மற்ற அனேவரும் வெற்றியும் பெற்று, சட்டமன்றத்தை அலங்கரித்துக்கொண்டும் இருக்கின்றனர். இது வரலாறு. இவ்வரலாற்றை உண்மையை ஒழ லூராரால் மறுக்க முடியாது.

இத்தொடர்பில், ஒழலூர் அழகேசனூர் குறிப்பிட்டிருப்பது, கலகப்புக்குரியதாக உள்ளது ; 'மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்ந்த அறிவாளியின் செயல்போல் உள்ளது ; அவர் கூறி யிருப்பது இது :—

> "பெரிய பஸ் அதிபர்கள் காங்கிரசுக் கட்சிக்கும் தேர்தல் நிதி தந்தனர் ; தி.மு. கழகத்துக்கும் தேர்தல் நிதி தந்தனர் ; ஆனல், சிறிய பஸ் அதிபர்கள் காங்கி ரசுக் கட்சிக்கு மட்டுந்தான் தேர்தல் நிதி தந்த னர்.

கருத் தடையும் கருத்துத் தடையும்!

திருமண வயதின் வரம்பை உயர்த்துவதில் வெற்றி கொண்டிருக்கும் மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகர், அடுத்து, 'கட்டாயக் கருத்தடை' என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறர்!

'குடும்பத் திட்டம்'—'அளவான குடும்பம்' என்றெல்லாம் மென்மையான சொற்களால் அழைக்கப்பட்டுவந்த மக்கட் தொகைக் கட்டுப்பாடு, இப் போது, 'தடை'—'ஆப்பரேஷன்'—'கட்டாயம்' என்பன போன்ற கடுமையான வார்த் தைப் பிரயோகங்களில் இருக் கிறது.

மக்கட தொகை வளர்ச்சியைப் பற்றி விரிவாக இரண்டுவகை கருத்துக்களே இருக்கின்றன; ஒன்று—'இயற்கையின் வளர்ச் சிக்கு எவ்விதக் கட்டுப்பாடும் கூடாது' என்பது ; மற் றென்று—'மக்கள் பெருக்கம், இந்திய நிலேமைகளுக்கு ஒத்து வரக்கூடியதாக இல்லே ; எனவே, ஒடுக்கப்பட வேண் டும்' என்பது!

ஆனல், 'மக்கள் தொகைப் பெருக்கத்தை இந்த அளவில் இந்தியா ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலேயில் இல்லே' என்ப வர்கள், அதை எவ்வாறு தடுப்பது என்பதில் மட்டும் வேறுபடுகிறர்கள்!

இந்த வேறுபாடையையே தங்க ளுக்கு சாதகமாக்கிக்கொண்டு, 'மக்கள் தொகை வளர்ச்சி யைக் கட்டுப்படுத்தக் கூடாது' என்று வாதாடுபவர்கள் மேலும் வலிவு பெறுகிறர்கள்!

இதேபோல், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டினே, 'உடற்கூ றத்திய ஒரு பிரச்சினே' என்று மட்டும் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மக்கள் மத் தியில் செல்வாக்கு இழப்பு துடன், எதிர்ப்பையோ வெறுப் பையோ சம்பாதித்துக்கொள் கிறது!

இந்த ஒரு நிலேயில், கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கெல்லாம் உச்சக்கட்டமான 'கட்டாயக் கருத்தடை ஆப்பரேஷன்' முறையைக் கொண்டுவர மத்திய அரசு முன்றுவரு வது, 'குடும்பத் திட்டத்துக்கே ஆபத்தாக வந்துவிடுமே' என்ற அச்சத்தைக் கொடுத் திருக்கிறது!

குடும்ப அளவைக் கட்டுப்படுத் துவதற்குக் கடமை அறு வைச் சிகிச்சையும் ஒரு முறையே தவிர, ரேரமார்க் கம் எனபது இல்லே. வேண்டு மானல், 'முழு வீசையைக் கொடுக்கும் ஓர் உடனடி முறை' என்று கூறலாம்.

'மென்மை'யான மற்றைய முறைகள் மக்கள் மத்தியில் பரவாமலும், அப்படிப் பரவி இருந்தாலும் பிரதிபலன் இல் லாமலும் இருக்கும் நிலேயில், இந்தியச் சமுதாயக் கருத்துக் களுக்கு அதிர்ச்சியையும் அரு வருப்பையும் ஏற்படுத்தக்கூடு மென அஞ்சப்படும் 'கட்டாய அறுவை' முறை, அவசரக் கோலத்தில் சட்ட வடிவம் பெருமல் இருப்பது நல்லது!

தனிப்பட்ட குடும்பங்களே— மொத்தமாக நாடே தாங்கும் சக்தி இருக்கும் வரையில், 'மக் கள் தொகைப் பெருக்கம்' என்பது, ஒரு பிரச்சினேயே அன்று!

தாங்கும் சக்தி இருக்கின்ற போதும், 'அளவான குடும்பம்' என்ற கருத்து இருப்பது, அத னினும் ஒருபடி முன்னேற்ற மான நிலேயைக் குறிக்கிறது!

எனவே, தனிப்பட்ட மனிதர் களின் உணர்வுகளும், பொரு ளாதார நிலேகளும் உள்ளடங் கிய ஒரு பிரச்சினேயை, மருத் துவ அல்லது சட்ட அடிப் படையில் மட்டும் அணுகுவது, பலனுக்குப் பதில் பாதகத் தையே கொடுக்கும்!

மேம்பாடுகள் மலிந்த குடும்பங் களில், 'அளவான எண்ணிக் கையிலேயே பிள்ளேகள் பிறக் கும்' என்று, பொருளாதார நூலில்கூடக் கூறப்பட்டிருக் கிறது.

"நாடும் தாங்கக்கூடிய சக் தியை இழந்துவிட்டது ; தனிப் பட்ட குடும்பங்களின் வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்தி யும்கூட, பிள்ளேகளின் எண்ணிக்கையை ஒரு சுமை யாகக் கருதாமல் இருக்க வைக்க முடியவில்லே" என்ற நிலேவந்த பின்னர்தான், அரசு 'குடும்பத் திட்டம்' என்ற முடி வுக்கு வந்திருக்கிறது!

ஆனல் அத்தகான அணுகும் முறை, அவ்வாறே கண் டனங்களுக்கும், குற்றங்களுக் கும் அப்பாற்பட்டதாக இல்லே!

சுகாதாரப் போராட்டக் காலத் தொட்டு விடுதலேக் கொள்கை யோடு சமமாக வைத்துச் சொல்லி வந்து—அரசியல் சட் டத்திலும் எழுதி—இருபது ஆண்டுக்கால ஆட்சிக்குப்பின் னரும்கூட மத்திய அரசு, 'நாடு முழுவதிலும் முழுமையான மதுவிலக்குச் சட்டம் அமு லில் இருக்கிறது' என்று சொல் லிக்கொள்ள முடியாத நிலே யில், அதைவிட மென்மை யான 'கட்டாயக் கருத்தடை ஆபரேஷன்' என்ற திட்

டத்தை மட்டும், எப்படி, 'சட் டம் போட்டு நிறைவேற்றி வைத்துவிட முடியும்' என்று நம்பிறதோ தெரியவில்லே!

வீட்டுக்கும் விவசாயத்துக்கும் அடிப்படையான கால்நடைச் செல்வத்தின் பெருக்கத்துக் கும், பாதுகாப்புக் கும்கூட மருத்துவ வசதிகளேயும், செய்முகைமுறைச் சாதனங் களேயும் தேர்ந்துகொள்ளாத— தேர்ந்திருந்தாலும் பரவலாக அணுசரிக்காத மக்களிடம், டாக்டர் சந்திரசேகர், எந்த அளவு 'கட்டாயக் கருத்தடை ஆபரேஷனை' வெற்றிகரமாக முடித்தவரப் போகிறர் என் பது, 'குடும்பக் கட்டுப்பாடே வேண்டாம்' என்பவர்களே விட, 'வேண்டும்' என்று ஆதரவு தெரிவிப்பவர்களிடம்தான் கேள்விக்குறியாக இருக்கிறது!

மக்களின் உடல்கூறு—உள் ளுணர்வு—மனப் பண்பு—பழ மைப் பிடிப்பு இவைகளுக்கெல லாம் சிகரம் வைத்தாற்போல், பெரும் பகுதியினரிடையே உள்ள தெய்வீக—மத நம்பிக் கைகள் ஆகிய இத்தனேக் கூறுகளேயும் பரிசீலிக்காமல், திடுமென, 'கட்டாயக் கருத் தடை ஆப்பரேஷன்' என்பது, 'குடும்பக் கட்டுப்பாடே வேண்டாம்' என்பவர்களே சாதகமாக அமையும் என்பது உறுதி!

"இதுபோன்ற 'அதிவீர' ஏற் பாடுகள், சமுதாய ஒழுங்கீனங் களுக்கு மறைமுக வழிவகுக் கும்" என்றதோர் கருத்து ஏற கனவே இருக்கிறது என்பதன யும் மத்திய அரசினர், கவனத் தில்கொள்ள வேண்டும்.

"அதிக எண்ணிக்கையுள்ள குடும்பம் எப்படிப்பட்ட வகை யிலும் நல்லதல்ல" என்ற கருத்து மக்கள் மத்தியில் பர வ எடுக்கப்படும் எந்த முயற்சி யும், உடனடி பலன் வேண்டு மானல் கொடுக்காமல் இருக்க லாம் ; ஆனல், எதிர்புக்கள் இல்லாத நிலேத்த மனிதக் கொடுப்பது, அதுவாக மட் டுமே இருக்கமுடியும்!

அல்லது, கருத்தடைச் சிகிச் சைக்கு மக்களே விரும்பி வரும் நிலேக்கு நாட்டில் கல்வி அறிவை (பள்ளிக்கூடக் கல்வி அல்ல) பரப்புவதும், எதிர் பார்க்கும் வினவினே, எதிர்பு புக்கள் ஏதுமின்றிக் கொடுக் கும்!

'அளவான குடும்பம் தேவை' என்ற உணர்வினே, உரிய வகையில் பெரும்பாலானவர் கள் பெறுத நிலேயில், தீவிர மான முடிவுகளேயோ, மாறு முறையினே மத்திய அரசு கொண்டுவர முயற்சிப் பது, குடும்பக் கட்டுப்பாட்டினே உணர்ந்தவர்கள் மத்தியில் தான் முதலில் அதிர்ச்சியைக் கொடுப்பதாக உள்ளது!

(4-ம் பக்கம் பார்க்க)

> " தங்களுக்கும் தேர்தல் நிதி தந்த பெரிய பஸ் அதிபர்களேப் பாதுகாத்து, காங்கிரசுக் கட்சிக்குத் தேர்தல் நிதி தந்த சிறிய பஸ் அதிபர்களேப் பழி வாங்குவதுதான் தி.மு. கழக அரசாங்கத்தின் பஸ் போக்குவரத்துக் கொள்கை போலும்! இதில் ஏதாவது சோஷலிச அடிப்படை இருக்க முடியுமா?"

சிறிய—பெரிய பஸ் முதலாளிகளில் எவரும், கழகத் தேர்தல் நிதிக்குக் கொடுத்தவர்கள் கிடையாது என்பதை ஏறகனவே எடுத் துக்காட்டியுள்ளோம். 'எதையாவது கூறி, கழக ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும்' என்ற கெடு நினேப்பில், அழகேசனூர் மேற்குறிப்பிட்டவாறு பேசியிருக்கின்ருர்.

'பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்க வேண்டும்' என்ற இலட்சியத்தைக் கொண்டிருப்பதாகத் தம்பட்டம் அடித்துக்கொண் டிருந்த காங்கிரசுக் கட்சி, தனது ஆட்சியில் அதன் ஏன் செய்யத் தயங்கியது—தவறியது என்பதற்குரிய விளக்கத்தை அழகேசனூர் அறிந்தோ அறியாமலோ தெளிவுபடுத்தி விட்டிருக்கின்ருர். கழக ஆட்சியின் மீது பழி சுமத்துவதாகக் கருதிக்கொண்டு, பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்காது காலம்கடத்தி வந்திருப் பதற்குரிய உண்மையான காரணத்தை, அழகேசனூர் அவர்கள் வெளியிட்டிருப்பதற்காக நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டி ருக்கின்றோம். இனியும், இதுபோன்ற பல உண்மைகளே வெளிப் படுத்தி வரவேண்டும் என்றும் அவரை வேண்டிக் கேட்டுக்கொள் ளுகின்றோம்.

—கா. சு.

வாலி

நீட்டுகிறது இந்தி!

இந்தி எப்படிக்கம் வந்து புகுந்து விடும் என்று நாம் எந்த நேரமும் விழிப்புடன் இருக்கவேண்டும் போலிருக்கிறது!

மெட்ரோ - கோல்டுவின் - மேயர் ஆங்கிலப் பட நிறுவனம், ரீண்டகாலமாகத் தனது படங்களுடன் செய்திச் சுருள்களையும் அனுப்பி வருகிறது. அண்மையில் பெங்ளூர் கொட்டகையொன்றில், எம்.ஜி.ஏ. பட நிறுவனத்தாரின் ஆங்கிலச் செய்திப் படம் இந்தி விளக்கங்களுடன் காட்டப்பட்டதாம்.

"நிலைமையை இப்படியே விட்டு வைத்தால், விரைவிலேயே ஆங்கிலப் படங்களை இந்தியில் 'டப்' செய்யப்பட்டு வெளியிடப்பட்டாலும் வியப்பதற்கில்லை" என்று படம் பார்க்க வந்தவர்கள் பேசிக்கொள்கிறார்கள்!

—'டெக்கான் ஹெரால்டு' வாசகர் பகுதி 4—8—67

விஷமிகளின் பிரசாரத்திற்கு முற்றுப்புள்ளி!

மேற்கு வங்காள சர்வோதய மண்டல் தலைவருடன் நக்சர்பாரி பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள குரு, 'அங்கு நடக்கும் இயக்கம் மக்களின் நிலப்பசி காரணமாகவே தோன்றியுள்ளது' என்றும், 'அலகாரட்டுச் சக்தி எதலுடனும் இந்த இயக்கத்திற்குத் தொடர்பு இல்லை' என்றும் கருத்தறிவித்துள்ளது.

சீனுவின் மேற்பார்வையில் இந்த இயக்கம் நடைபெற்று வருவதாக பீகிய் ரேடியோ விஷமத்தனமாகப் பரப்பிவந்த பொய்யை அம்பலப்படுத்துவதோடு, மேற்கு வங்காளத்தில் சட்டம்—அமைதி சீர்குலைந்துவிட்டதாகக் கூறி, 'அங்கு குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும்' என்று வற்புறுத்தி வந்த மத்திய—மாநில காங்கிரசுத் தலைவர்களின் பதவிப் பேராசையையும் இந்த அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

—'டெக்கான் ஹெரால்டு' (3—8—67) தலையங்கம்

சர்க்கரைத் தொழிலுக்கு தென்னகமே ஏற்றதாம்!

வட நாட்டு முதலாளிகள் இடம் மாறத் திட்டம்

லக்னோ, ஆக. 7—

உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய இரு மாநிலங்களச் சேர்ந்த 45 சர்க்கரை ஆலைகளின் நிர்வாகிகள் அவற்றைத் தென்னாட்டுக்கு மாற்ற எண்ணம் கொண்டுள்ளன ராம்.

தங்கள் ஆலைகளை மைசூர் ஆந்திரம், தமிழகம், மராட்டிரம் ஆகியவற்றுக்கு மாற்றிக்கொள்ள அந்த ஆலைகளின் நிர்வாகிகள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியுள்ளனர்.

இந்த மாநிலங்களில் நல்ல வசதிகள் இருப்பதாக இந்திய சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர் சங்கத்தின் பிரமுகர் ஒருவர் கூறினார்.

இந்த மாநிலங்களில் கரும்பிலிருந்து அதிக அளவில் சர்க்கரை கிடைத்தல்—சர்க்கரைத் தயாரிப்புக்குக் கரும்பு கிடைத்தல் —வாங்கும் வரி இல்லாமை ஆகியவை அந்த வசதிகளில் அடங்கும்.

மேற்கூறியவாறு அவை தென்னாட்டுக்கு மாற அனுமதிக்கப்பட்டால் உத்தரப் பிரதேசம், பீகார் ஆகியவற்றில் சர்க்கரைத் தொழிலுக்குப் பின்னடைவு ஏற்படும்.

ஆங்கிலப் பள்ளிகளில் 'இந்தி வெறியர்'களின் பிள்ளைகள்

மொரார்ஜியின் பேரர்களும் ஆங்கிலமே படிக்கிறார்களாம்

புதுடில்லி, ஆக. 8—

மும்மொழித் திட்டத்திற்குப் பதிலாக இரு மொழித் திட்டத்தை மத்திய கலவியமைச்சர் கொண்டு வந்தபோது, (இந்தியைத் தீவிரமாக ஆதரிக்கும்) தஞ்சை தலைமை அமைச்சர் திரு. மொராராஜி கடுமையாக எதிர்த்தார்.

ஆனால் தஞ்சை தலைமை அமைச்சரின் பேரர்கள், உயர்தர ஆங்கிலப் பள்ளியில் படித்து வருகிறார்கள். முன்னள் சமஸ்தான மன்னர்களின் குழந்தைகளுக்கான பள்ளி இது.

இதேபோல், ஆங்கிலத்தைக் கடுமையாக எதிர்க்கும் மற்றொரு சம்பந்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரின் மகன் பம்பாயில் ஆங்கிலப் பள்ளியில் படித்துவருகிறான்.

ஜனசங்கம், ஆர்ய சமாஜம் போன்றவைகளச் சேர்ந்த இந்தி வெறியர்களின் குழந்தைகளும் ஆங்கிலப் பள்ளியில்தான் படித்துவருகிறார்கள்!

பாசத்தால் வளர்ந்த கட்சி தி.மு.க.

"இன்றைத்தினமும் பணக்காரர்களின் ஆதரவு காங்கிரசுக்கு இருக்கிறது.

தி. மு. கழகத்தை ஆதரித்தவர்கள் — ஆதரிக்கிறவர்களெல்லாம், பாட்டாளி மக்கள்—நடுத்தரக் குடும்பத்தினர்!

தவருன வழிகளில் ஈடுபட்—தங்கக் கடத்தல் செய்ய—கள்ளச் சங்தையில் ஈடுபட—கொள்கை இலாபமடிக்கப் பலர், காங்கிரசுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள்! நாசவழியில் ஈடுபடுகிறவர்களால் காங்கிரசுக்கு நிரம்பப் பணம் கிடைத்திருக்கிறது!

கழகத் தோழர்கள் எப்போதும் போல் பொதுமக்களிடம் தொடர்பு வைத்துக்கொண்டு நல்லாதரவு திரட்டவேண்டும். பொதுக் காரியங்களச் செம்மையோடு நடத்தச் சித்தமாக இருக்க வேண்டும்.

கண்கலங்கும்போது தடைக்க வரும் ஆதரவுக் கரங்கள் தி. மு. கழகத்தில் இருப்பது பெருமைப் படத்தக்கதாகும்.

கழகத்தில் ஈடுபட்டு இன்னுயிர் தந்து இழப்புகளுக்கு ஆளாகிய தோழர்களுக்குக் கழகம் நிதி திரட்டி உதவியிருக்கிறது! இப் படிப்பட்ட பந்தம்—பாசம்—சொந்தம் மற்றக் கட்சிகளிடத்தில் இருப்பதில்லை!

தோழர்கள் என்னை, 'அண்ணு' என்று அழைக்கும்போது, அந்த இனிமையான சொல், இசையாக—அதைவிட இனிமையாக என் காதுகளிலே விழுகிறது!

அப்படிப்பட்ட பாசம் வளர வேண்டும்! 'அரசியலில் பாசம் கூடாது' என்றவர்கள், நல்ல வேளையாக என்னவிட்டு விலகி விட்டார்கள்!

பாசத்திலும்தான் இம்மாபெரும் இயக்கத்தை நான் கட்டிக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறேன்!

நான் பிறந்தது காஞ்சிபுரத்தில்; மன்னர்குடியில் பிறந்த அறிஞும் வீரமரபில் உதித்த மன்னை நாராயணசாமி அவர்களப் பார்த்து, 'இன்னின்ன காரியங்களச் செய்யுங்கள்' என்று சொல்ல—அவரும், 'ஆகட்டும் அண்ணு' என்று கூறுகிறார் என்றல், 'முதலமைச்சர் என்பதால் இந்த நிலையல்ல—நமக்குள் இருக்கின்ற பாசத் தினுல்தான் நடக்கிறது!

இப்படிப்பட்ட பாசத்தை மறவாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உழைப்புக்கெல்லாம் இது அறுவடைக் காலம் அல்ல! விதைப்புக் காலமே இப்போது தான்! இப்போதிருந்து அதிக உற்சாகத்தோடு பணியாற்ற வேண்டும்!

கழகத் தோழர்கள் மேலும் நல்ல முறையில் பணியாற்றி எழகத் திற்குக் கீர்த்தி தேடித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

---அறிஞர் அண்ணு

(செம்பனுர் கோயில் கார் அளிப்பு விழாவில்)

தமிழகத்தில் மைக்ரா படிவம் கண்டுபிடிப்பு

சென்னை, ஆக. 7—

ஒலிக் கட்டுப்பாட்டுச் சாதனங்களையும், மின்சாரச் சாதனங்களையும் தயாரிப்பதற்குப் பயன்படக் கூடிய அரிய வகை மைக்ரா, தமிழகத்தில் வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாநில மில உட்கூறு ஆராய்ச்சித் துறை தெரிவித்துள்ளது.

'வெர்மிகுலேட்' எனப்படும் அந்த மைக்கா படிவங்கள், சுமார் 1,90,000 மெட்ரிக் டன் அளவுக்கு உள்ளது.

உலகில் இந்தியா தவிர, இப்படி வங்கள் உள்ள ஒரே நாடு தென்னப்பிரிக்காவாகும்.

அரசுடையாக்கப்பட்ட பஸ் ரூட்டுகள்

பழைய உரிமையாளர்க்கு இழப்பு ஈடு இல்லை

திருச்சி, ஆக. 5—

அரசு எடுத்துக் கொள்ளும் பஸ் தடங்களுக்காக அந்தப் பாதையில் பஸ் விடுபவர்களிடமிருந்த வர்களுக்கு இழப்பு ஈடு எதுவும் தரப்படமாட்டாது; எனினும் அந்தப் பஸ் சொந்தக்காரர்களுக்கு 75 மைல்களுக்குக் குறைவான வேறு பஸ் ரூட்டுகள் தரப்படும்; இது சம்பந்தமாக எல்லாப் பஸ் சொந்தக் காரர்களையும் ஆகஸ்டு 9-ந் தேதி நான் சந்திக்கப்போகிறேன்"

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணுநிதி, இங்கு செய்தியாளர்களிடம் கூறினர்.

"சேலம் மாவிலத்தில் பெருவளர்ல்லூர், ஆத்தூர் பஸ் தடங்கள் விரைவில் அரசு மேற்கொள்ளும்" என்றும் அவர் சொன்னர்.

"திருச்சி, மதுரை, கோவை நகர பஸ் ரூட்கள் தற்போது மேற்கொள்ளும் எண்ணம் அரசுக்கு இல்லை" என்றும் அவர் சொன்னர்.

சென்னை சுற்றுப்புறத்தில் படி அரிசித் திட்டம்

அண்ணு—கே. ஏ. மதியழகன் துவக்கிவைப்பர்

மதுராந்தகம், ஆக. 5—

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலும் விரிவுபடுத்த தமிழக அரசு முடிவு செய்திருந்தது; அதன் முதல் நிகழ்ச்சியாக ஆகஸ்டு 15-ம் நாள் முதலமைச்சர் அண்ணு அம்பத்தூரிலும், உணவமைச்சர் மதியழகன் தாம்பரத்திலும் இத்திட்டத்தைத் துவக்கிவைப்பர்"

என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இட்சுமிகாந் தன் பாரதி கூறியுள்ளார்.

சண்டிகார் போட்டியில் டில்லிக்கு ரூ. 1-கோடி செலவு

சண்டிகார், ஆக. 7—

சண்டிகார் நகரை, மத்திய ஆட்சிப் பகுதியாக வைத்திருப்பதன் காரணமாக, மத்திய அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வங்கம் ஏற்படுகிறது என்று தெரிகிறது.

மற்ற நகரங்களப்போல சண்டிகாருக்கு வருமானம் கிடையாது; ஏனெனில், வரிகள் விதித்து வருலிக்க சண்டிகாரில் நகரசபை கிடையாது. சண்டிகாரில் வீட்டு வரி—வேலை வரி—மற்றும் பிற வரிகளும் கிடையாது. இதனுல் செலவைச் சரிக்கட்டுவதற்கு வருமானமே கிடையாது.

சண்டிகார், மத்திய அரசுக்கு செலவினமாகத்தான் இருக்கிறது. எனவே, இது விஷயத்தில் என்ன செய்வது என்று மத்திய அரசு திகைக்கிறது. ஏனெனில், 'சண்டிகார் நகரை, பஞ்சாப் மாநிலத்திற்குக் தருவதா ? அரியானு மாநிலத்திற்குத் தருவதா ?' என்று முடிவு செய்யமுடியாமல் இருக்கிறது.

சண்டிகாரைப் பெறுவதில் இரு மாநிலங்களும் போட்டி போடுகின்றன. இப்போட்டியில் மத்திய அரசுக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

வேலையிழந்தோருக்குப் பணவுதவி

புதுடில்லி, ஆக. 4—

வேலையிழக்கும் தொழிலாளர்களுக்கு நிதி உதவியளிக்க விரிவான இன்சூயரன்ஸ் திட்டத்துக்கு மத்திய தொழிலாளர் நலத்துறை இறுதி உருக்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

முதலில் பிராவிடண்ட் நிதியசதியுள்ள எல்லாத் தொழிலாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர்; பிறகு மற்றவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்தத் திட்டத்தினகீழ் ஒருவர் பயன்பெற, அவர் வேலையிழந்த தற்கு அவர் செய்த தவறு காரணமாக இருக்கலாகாது. வேலை செய்யத் தகுதியெற்றதிருக்க வேண்டும்; ஆனுல், தக்க வேலை கிடைக்க இயலாதிருக்க வேண்டும்.

ஒழுங்கீனம் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அல்லது போதிய காரணமின்றி தக்க வேலையை மறுத்தால் வேலையற்றிருக்கும் தொழிலாளருக்குப் பலன் கிடைக்காது.

55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், ஆண்டிலு சில தினங்களே இயங்கும் ஆலைகளில் வேலை செய்வோருக்கும் இத்திட்டம் பொருந்தாது.

கல்வித்தரம் குறையக் காரணம்!

பெங்களூர், ஆக. 5—

"நமது மாநிலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேர்வுகளில் தோல்வியுறும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருவதற்குக் காரணம் அந்த மாணவர்கள் அறிவில் குறைந்தவர்கள் என்பது அல்ல; அவர்களுக்குப் போதிய மொழியறிவு இல்லை என்பதுதான் முதன்மையான காரணமாகும்.

"துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் பெரும்பான்மை ஆசிரியர்களுக்கே போதுமான மொழி அறிவு இல்லாதிருக்கையில் அவர்களால் மாணவர்களுக்கு மொழி அடிப்படையில் நல்ல அறிவினைத் தர முடியும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் ?"

என்று, கருநாடக மாநில கல்வி அமைச்சர் கே.வி. சங்கர கௌடா ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தாய் மொழி எங்கே?

கன்னடத்து சேயின் கேள்வி

பெங்களூர், ஆக. 4—

கூஜாதா, பெங்களூர் சாமராஜபேட்டையிலுள்ள கன்னட்பள்ள ளியொன்றில் முதல் வகுப்பில் படிக்கும் ஐந்து வயதச் சிறுமி!

இவளுடைய வகுப்பறைச் சுவர்களின் மீது நாயும் காக்கையும், முயலும் ஆமையும் போன்ற கதைகளே விளக்கும் பல படங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன!

அவற்றில், கதைகள் ஒரு புறத்தில் ஆங்கிலத்திலும், மறுபுறத்தில் இந்தியிலும் தரப்பட்டுள்ளன.

அவற்றையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த அந்தச் சிறுமி, தனது ஆசிரியையைப் பார்த்து, 'மேடம்; இங்குப் படங்களில் கதைகள் ஒரு பக்கத்தில் ஏ, பி, சி, டி-யில் இருக்கின்றன; இன்னெரு பக்கத்தில் எதிலேயோ இருக்கின்றன; இது கன்னடத்தில் ஏன் இல்லை" என்று கன்னட மொழியில் வினவியிருக்கிறள்.

இதன், ஆசிரியையை பார்த்துக் குழந்தை கேட்ட கேள்வி என் பதைவிட, சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களப் பார்த்துக் கேட்கப்பட்டகேள்வி என்று கொள்ளுவது பொருத்தமாக இருக்குமல்லவா ?

[இது உண்மை நிகழ்ச்சி; நடைபெற்ற இடம்: ஸ்ரீராமா சிசு வித்தாரா, பெங்களூர்-18.]

கலைவானர் நினைவு நாள்

சென்னையில் ஒரு வாரம் சிறப்புக் கலை விழா

சென்னை, ஆக. 7—

"ஆகஸ்டு 29-ம் நாள்முதல் ஏழு நாட்களுக்கு பகிலெரு கலை நிகழ்ச்சிகளுடன் தியாகராய நகர் வாணி மகாலில் ஒரு கலை விழா சிறப்புற நடைபெறுகிறது.

விழாவில் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணு அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும், ஒவ்வொரு நாள் விழாவிற்கு ஒருவர் வீதம் பங்கு கொண்டு பொறுப்பு வகித்துப் பெருமைபடுத்துகிறார்கள்.

சென்னை மேயர் அவர்களும் பங்கு கொள்ளுகிறார்கள்.

விழாவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், தமிழ்ப் பெரியார்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், கலைத்துறைப் பெருமக்களும் சிறப்புரைகள் வழங்க விருக்கிறார்கள்.

திரைப் படம், கதா காலட்சேபம், லிலுலுப் பாட்டு, தெருக்கூத்து, நாடகம், இன்னிசை, கிராமியப் பாடல்கள், கவியரங்கம், நாட்டியம் இன்னும் பல கலை நிகழ்ச்சிகளும் கடைபெறவிருக்கின்றன.

கவியரங்கம், முத்தமிழ்க் காவலர் கே. ஏ. பி. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. 30 கவிஞர்கள் கலந்துகொண்டு, 'கலைச்செல்வ' என்னும் பொருள் பற்றிக் கவிதை பாடுகிறார்கள்.

விழாவின் ஒவ்வொருநாளும் புகழ்மிக்க நடிகர்கள்—நடிகைகள், மற்றும் கலைத்துறையிலுள்ள முக்கியஸ்தர்களும் வருகை தந்தும் பங்குகொண்டும் விழாவினை வெற்றிகரமாக நடத்தித் தருகிறார்கள்.

கலைவானர் அன்பர்களும் மற்றமுள்ள பெரியோர்களும் விழா விற்கு ஆசிகள் ஆதரவுகள் வழங்கி வருகை தரவேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது"

என்று, கலைவானர் கிலையச் செயலாளர் வெ. நாராயணன் அறிவிக்கிறார்.

தமிழகத்தில் சட்டம்--ஒழுங்கு சிறப்பாகக் காப்பாற்றப்படுகிறது

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆளுநர் உஜ்ஜல் சிங் உரை

உணவு நிலை சீர்பெற அரிய யோசனைகள்

திருச்சி, ஆக. 7—

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்—காவல் துறை அதிகாரிகள் ஆகியோரின் கூட்டு மாநாட்டை தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் இன்று துவக்கிவைத்தார். தமது உரையில் அவர், முக்கிய மான நான்கு யோசனைகளை வெளியிட்டார்—(1) தமிழ் நாட்டில் நெல் கொள்முதல் முறை மாறவேண்டும்; (2) விவசாயிகளிடமிருந்து மட்டுமேன்றி அரிசி ஆலைக்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்ய லாம்; (2) விவசாயிகளிடமிருந்து வாங்கும் நெல்லிக்கான கொள் முதல் விலையை மாற்றியமைக்க வேண்டும்; (3) புதுவகை நெல் விதைகளை உண்டாக்க வேண்டும்; (4) சாகுபடிக்குத் தகுதியான தரிசு நிலங்களை உழுது பயிரிட வழிதேட வேண்டும்.

இம்மாநாடு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தி லுள்ள இரானி மங்கம்மாள் தர்பார் மண்டபத்தில் கூடியது.

சென்னை நகரிலும், உதகை யிலும் இம்மாநாடு நடப்பது வழக் கம். வெளி மாவட்ட நகரங்களில் மாநாடு கடுவது இதுவே முதல் தடவை.

இம்மாநாடு தமிழக முதலமைச் சர் அதிஸர் அண்ணு தலைமையில் நடந்தது; தமிழகத்தின் எல்லா அமைச்சர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். அரசின் செயலாளர்களும், பல்வேறு துறைகளின் சேர்க்க தலைமை அதிகாரிகளும் இம்மாநாட்டில் பங் கேற்றனர்.

நகரங்களுக்கு வெளியில் நடக் கும் முதல் மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மாநாடு என்ற பெருமை மட்டுமன்றி மேலும் பல பெருமை களும் முதன்முதலில் திருச்சிக்குக் கிடைத்தது.

* ஆளுநருக்கும், அமைச்சர்களுக் கும் மாநாட்டு மண்டபத்தில் ஆளும் கட்சியின் சார்பில் மாலை அணிவிப்பதற்கு அனுமதித்தது இதுவே முதல் தடவை; திருச்சி மாவட்ட நிர்வாகிகள் முன்னேற்றக் கழகச் சார்பில், மாவட்டச் செய லாளர் அன்பில் தர்மலிங்கம் ஆளு நருக்கு பன்னீர் தெளித்து மாலை அணிவித்தார்.

மற்றும் நகர தி. மு. க. செய லாளர் அ. நடராசன், தண்டச் செயலாளர் செவந்திலிங்கம், நாக சுந்தரம் எம்.எல்.ஏ. ஆகியோர் அமைச்சர்களுக்கும், மற்றவர் களுக்கும் மாலை அணிவித்தனர்.

ஆளுநர் உரையாற்றுகையில், செய்தியாளர்கள், மாநாட்டில் அனுமதிக்கப்படவில்லை.

ஆளுநர் எழுதிப் படிக்காமல் வாய்மொழியாகவே உரை நிகழ்த் தியது குறிப்பிடத்தக்கது.

இரானி மங்கம்மாள் தர்பார் மண்டபத்தின் வாயிலில் தமிழில் பெரிய பெயர்ப் பலகை அமைக் கப்பட்டிருந்தது. 'மாவட்ட ஆட்சி யாளர்கள் மாநாடு' என்ற தமிழ் எழுத்துக்கள் எல்லோரையும் வர வேற்றன.

மாநாட்டுக்கு வந்தவர்களை, மாநாட்டு வரவேற்பாளர்கள், சந் தனம் வெற்றிலைப் பாக்குடன் வர வேற்றது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டைத் துவக்கிவைத்து ஆளுநர் உஜ்ஜல் சிங் குறிப்பிட்ட தாவது:—

"மாநாட்டில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்; மாநாட் டைத் துவக்கிவைப்பதில் குது கலமடைகிறேன். முதலமைச்ச ரின் அன்பான அழைப்பின் பேரில் இதில் கலந்துகொள் கிறேன்.

நிர்வாகத்தின் சாவி போன்றவர் கள் அதிகாரிகள்; அவர்கள் கோரிக்கையானும், திறமையுடனும் ஒற்றுமையுடனும் பணியாற்ற வேண்டும்.

மக்கள் குறைகளைத்தீர்ப்பதில் அதி காரிகள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்; மக்கள் குறைகளை மாவட்ட அளவில் அதிகாரிகள் தீர்த்துவிட்டால் மக்கள் தமிழக அரசு தலைமைச் செயலகத்தைத் தேடி அலைய வேண்டியிருக்காது.

தமிழ்நாட்டில் காலவிதுறை நல்ல முறையில் செயல்படுகிறது; குற் றங் குறைகள் அதிகரிப்பது தடுக்கப்பட வேண்டும்.

சட்டம்—ஒழுங்கை நிலைநாட்ட லில் மாநிலங்களில் இராணுவம் வர வழைக்கப்பட்டிருப்பதைப் பார்க் கிறேன்; ஆனால், தமிழகத்தில் அப்படி ஏதும் நடக்கவில்லை. இதற்கு இங்குள்ள முதலமைச் சரும் காவல்துறையினரும்தான் காரணம்.

இவ்வாண்டு சிறு சேமிப்புத் திட் டத்தின் மூலம் ரூ. 11-கோடி திரட்டத் தீர்மானித்துள்ளோம். இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிர க் கவனம் செலுத்த வேண்டும்.

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்புக் குழுவினர் அளிக்கும்

திரைப் பட விழா

சென்னை பாலர் அரங்கில்

தினசரி 2 காட்சிகள் (மாலை 2-30 மணி—மாலை 6 மணி)

9--8--67: 'பூம்புகார்'

[6 மணிக் காட்சி மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்]

நுழைவுக் கட்டணம்: ரூ. 3, 2, 1; சீசன் டிக்கெட்: ரூ. 25

முதலமைச்சர்

அறிஞர் அண்ணு

சுற்றுப்பயணம்

ஆகஸ்டு

10: குற்றாலம்;

11: காலை 10 மணி: தென்காசி; 11 மணி: கடையநல்லூர்; 12 மணி: புளியங்குடி; பிற்பகல் 1 மணி: சங்கரன்கோவில்; 2 மணி: கோவில்பட்டி; மாலை 5 மணி: திருநெல்வேலி (பேரா சிரியர் சேதுப்பிள்ளை நினைவு வார்டுக்கு அடிக்கல் நாட்டுதல்); இரவு 10 மணி: அம்பாசமுத் திரம் பொதுக்கூட்டம்;

12: காலை 10 மணி: சேரமாதேவி; 11 மணி: களக்காடு; 12 மணி: ஏர்வாடி; பிற்பகல் 1 மணி: நான்குநேரி; 3-30 மணி: நெல்லை வழக்கறிஞர்கள் சங்கம்; 4-30 மணி: ஊரகப்பித் தலைவர் கள் வரவேற்பு; மின் கழக ஊழியர்கள் வரவேற்பு; பட்டா வழங்குதல்; இரவு 11 மணி: பொதுக்கூட்டம்;

13: காலை 11 மணி: திருச்செந் தூர்; 3-30 மணி: வீரபாண்டி யன் பட்டினம்; 5-30 மணி: தாரங்கதாரா கெமிக்கல்ஸ்; 6-30 மணி: துறைமுக விழா; 7 மணி: தூத்துக்குடி; 8 மணி: பொதுக் கூட்டம்.

உணவமைச்சர்

கே.ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

ஆக. 13: காலை 10 மணி: திருப் பூர் பால் வழங்கு சங்கக் கட்டி டத் திறப்பு; 11-30 கணியூர்.

ஆக. 14: மாலை 4 மணி: காங் கயம் ஊராட்சி ஒன்றியத்தின் தாவிகக் கிடங்கு திறப்பு விழா; மாலை 5 மணி: பொது வர வேற்பு; மாலை 7 மணி: ஈரோடு.

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

ஆக. 14: காலை 8 மணி: மோடாக் குறிச்சித் தொகுதி நிகழ்ச்சிகள்; பகல் 12 மணி: சங்ககிரியா கினவு பயிற்சிப் பள்ளி விழா; பிற்பகல் 2-30 மணி: புதுப் பாளையம் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 3-30 மணி: செலம்பகவுண்டன்வசு பள் ளித் திறப்பு; 4-30 மணி: சென்னிமலை உழவர்கள் கூட் டம்.

நடக்க இருப்பவை

9--8--67

வேலாயுதம்பாளையம்

தி. மு. க. சார்பில் இரவு 9 மணிக்கு, கல்வளார் திடலில்; தலைவர்: எஸ். கல்லுசாமி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டி. பி. முர்த்தி, வை. இரத்தினவேலு, எஸ். கே. சாமியப்பன், கு. வெங் கடாசலம், க. ராச்சிமுத்து, மற் றும் பலர்.

Madras State Electricity Board

Madurai Electricity System

TENDER NOTICE

SEALED tenders are invited for the Construction of a shed for storing fly ash at Pasumalai S.S., Madurai District upto 3 P.M. on 18—9—67. The same will be opened at 4.00 P.M. on 18—9—67.

The tender specification and drawing may be obtained from the undersigned on production of the receipt for the payment of Rs 15.88 (Rupees fifteen and paise thirty eight only) either in cash or money order to the Chief Accountant, Madurai Electricity system, Madurai-7. The amount cannot be refunded on any account.

It is not binding on the department to accept the lowest or any tender.

Tender specification will be available for sale from 4—9—67.

SUPERINTENDING ENGINEER

இந்த வாரம்

'ஹோம் ரூல்'

(HOME RULE)

படித்தீர்களா?

★

அன்சாரி—பாண்டு—தாமு

ஆகியோர் சந்திக்கும் 'கக்கூ

ஸ்' ஒரு முக்கிய அம்சம்.

'Home Rule'—9, Avenue Road, Madras-84.

மற்றும் இரு தென்னகத் திட்டங்களுக்கும் ஆபத்து!

நான்காம் திட்டத்தில் சேர்த்தும் நிதித்துறை அனுமதி இல்லையாம்

5 கோடி ரூபாய்க்குமேல் செலவிட்டபின் மத்திய அரசு தரும் தகவல்

நூத்தங்குடித் துறைமுகத் திட்டத்துக்கு இன்னும் நிதித்துறை அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறிப் பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கும் மத்திய நிதியமைச்சத் துறையும், போக்குவரத்துத் துறையும், மேலும் இரு தென்னகத் திட்டங்களுக்கும் அதே நிலையை ஏற்படுத்திவிடுவதாகத் தெரிகிறது.

மங்களூர்த் துறைமுகத் திட்ட மும், கொச்சி கப்பல் கட்டும் தளமும்தான் அவை.

இந்த இரண்டு திட்டங்களுக்கு மான துவக்கக் கட்ட வேலைக ளெல்லாம் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டுவிட்டன; அவற் றிற்காக ஒரளவு செலவும் செய் யப்பட்டிருக்கிறது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் திலும் இவை சேர்க்கப்பட்டிருக்கின் றன.

இந்தத் திட்டங்களுக்கு அமைச் சரவையின் முன் அனுமதி இன்றியே செலவிடப்பட்டிருப்ப தாக இப்போது நிதியமைச்சத் துறை அறிவித்துள்ளது.

"இந்தத் திட்டங்கள், அடுத்து வரும் பல ஆண்டுகளுக்கு இலாபகரமாக இருக்காது" என்று நிதியமைச்சத் துறை யின் உயர்ந்த அதிகாரிகள் கருதுகிறார்களாம்; இதனை நிதி யமைச்சர் மொரார்ஜீயும் ஆத ரிக்கிறாராம்.

எனவே, தேவையான நிதி பகரிக் கான வாய்ப்பு ஏற்படுமுன், மேற்கொண்டு இத்திட்டங் களுக்குப் பணம் ஒதுக்க அரசு தயங்குகிறதாம்.

இதே நேரத்தில், போக்குவரத்து அமைச்சத்துறை, மங்களூர்த் துறைமுகத்துக்கு ரூ. 5 கோடி வரை செலவிட்டுக்கிறது.

"கொச்சித் துறைமுகத் திட்டம் நான்காம் திட்டத்தில் சேர்க்கப் படும்" என்று தலைமையமைச் சர்களாலும், ஏனைய அமைச்சர் களாலும் அவ்வப்போது கேரள மக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற் கான செலவும் ஒரளவு செய்யப் பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம், போக்குவரத்துத் துறை, தனது தொழில் நுணுக்க நிபுணர்களின் ஆய்வுக்குப்பின் நிதியமைச்சுத் துறைக்கு அனுப்பிவைத்து இரண்டு திங்க களுக்கு மேலாகிறதாம்.

வருந்துகிறேன்

'நம் காடு' அலுவலகத்தில் பைண்டராகப் பணியாற்றும் தோழர் எஸ். கோபால் அவர் களின் 1½ வயது ஆண் குழந்தை; இயற்கையெய்தி செய்தி அறிந்து வருந்துகிறேன்.

அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரித்தாகுக.

★

மறைவு

திரைப்பட இயக்குநரும், 'நாயி றும் நீங்களும்' என்ற திரைப் படத்தைத் தயாரித்துக்கொண் டிருந்தவருமான திரு. சடகோபன், நேற்று மாரடைப்பால் திடீரென் அகால மரணமடைந்த செய்தி அறிந்து வருத்தமடைந்தோம். அவரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும் பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனு தாபமும் ஆறுதலும் உரித்தாகுக.

(ஆ—ர்.)

சி. பி. சிற்றரசு சென்னை திரும்பினர்

விமான நிலையத்தில் வரவேற்பு

சென்னை, ஆக. 7—

தி. மு. க. வெளியீட்டுச் செய லாளர் திரு. சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்கள், தமது குழுவினருடன் இலங்கைச் சுற்றுப்பயணத்தை முடித் துக்கொண்டு இன்று காலை விமான மூலம் சென்னை வந் தடைந்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத் தில் கழகத் தோழர்களும், கண்பார்களும் மாலையணிவித் துச் சிறப்பாக வரவேற்றனர்.

கருத் தடையும்..

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேடிக்கையாகக் குறிப்பிட வேண்டுமென்றால், 'குடும்பக் கட்டுப்பாடு தேவையே இல்லை' என்று தீவிரமாக எதிர்ப்பவர்களின் கருத் துக்கே 'தடை' ஏதும் இல்லாத நிலையில், இதுபோன்ற ஒரு கருத்தடை முறை வரவேற் பினைப் பெறுமா என்பது ஐயப் பாடாகவே இருக்கிறது!

—எஸ். ஆர்.

நிர்மலா முஸ்லேற்றுக் கழகத்தினரை, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகும், வெள்ளியன்று காலையும், அன்பெவரையும் கொண்டு, அழகிய அச்சகத்தில் (24, சூளைநாரா யண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியீட்டு ரோது.